**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | STC.124/2023 |
| Deposition of witness | | PW1 |
| Name | | திரு. நடேசன் |
| Father’s/Husband Name | | திரு. பிச்சைக்கண்ணு |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 54/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு பட்டுக்கோட்டை கிளை கனரா வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. வேறு வங்கியில் கணக்கு எதுவும் இல்லை. மொபைல் மூலம் Gpay போன்ற பணப்பரிமாற்றம் செய்யக்கூடிய வசதிகள் எனக்கு உள்ளது. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு சொத்துகள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எதிரி விவசாய வேலைக்கு செல்வதால் வருமானம் வருகிறது. நான் கடன் கொடுத்த தேதியில் எதிரியிடம் இருந்து புரோ நோட்டு, கடன் ஆவணங்கள் எழுதி வாங்கவில்லை. எதிரி எந்த குடும்ப தேவைக்காக கடன் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்த தேதியில் வேறு நபர்களுக்கு கடன் எவ்வளவு இருந்தது என்பது பற்றி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ரூ.10,00,000/- என்றால் சரிதான். எதிரிக்கு இந்த வழக்கு தொகையை தவிர வேறு எந்த தொகையும் கடனாக

கொடுக்கவில்லை. எதிரிக்கு கொடுத்த கடனுக்கு வட்டி நிர்ணயிக்கவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத் தேதியில் வேறு சாட்சிகள் யாரும் இல்லை.

2. எதிரி திருமணம் மற்றும் அவரது வீட்டு விசேஷங்களுக்கு நான் சென்றதில்லை. ரூ.20,000/-த்திற்கும் மேற்பட்ட தொகையை காசோலை மூலமாகவோ வங்கி பரிமாற்றம் மூலமாகதான் செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும். எதிரிக்கு கொடுத்த கடன் தொகையை எனது வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை. நான் Gpay மூலமாக வரவு செலவு வைத்துக்கொள்வேன் என்றால் சரிதான். என்னுடைய Gpay பயன்படுத்தும் செல்போன் நம்பர் 9443448349 என்றால் சரிதான். 13.03.2022 அன்று விஷ்ணுவர்த்தன் என்பவர் மூலமாக எனக்கு இரண்டு முறை ரூ.25,000/- Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.05.2022 அன்று விஷ்ணுவர்த்தன் என்பவர் மூலமாக எனக்கு இரண்டு முறை ரூ.25,000/-மும் Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.04.2022 அன்று விஷ்ணுவர்த்தன் என்பவர் மூலமாக எனக்கு இரண்டு முறை ரூ.25,000/-மும் Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விஷ்ணுவர்த்தன் எதிரியின் கணவர் செல்லத்துரையின் அக்கா மகன் என்றால் சரிதான். எதிரியின் கணவர் அனுப்ப வேண்டிய பணத்தை விஷ்ணுவர்த்தன் மூலமாக அனுப்பினார் என்றால் சரியல்ல. விஷ்ணுவர்த்தன் எனக்கு தனியாக கொடுக்க வேண்டிய பணத்தை தான் அனுப்பினார். விஷ்ணுவர்த்தன் எந்த தேதியில் என்னிடம் கடன் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 27.02.2023 அன்று அருள்ஜோதி என்பவர் மூலமாக எனக்கு ரூ.25,000/-மும், 09.03.2023 அன்று ரூ.16,000/- Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அருள்ஜோதி எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் செல்லத்துரை கொடுக்க வேண்டிய பணத்தை தான் அருள்ஜோதி அனுப்பினார் என்றால் சரியல்ல. எனக்கும் அருள்ஜோதிக்கும் கடன் கொடுக்கல் வாங்கல் கிடையாது. அருள்ஜோதி கொடுத்த தொகை எதிரியின் கணவர் எனக்கு அருள்ஜோதி மூலமாக கொடுத்தது என்றால் சரிதான்.

3. 03.03.2023 அன்று பூங்கோதை என்பவர் மூலமாக எனக்கு ரூ.15,000/-மும், 09.03.2023 அன்று ரூ.49,000/- Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூங்கோதை கொடுத்த தொகை எதிரியின் கணவர் எனக்கு பூங்கோதை மூலமாக கொடுத்தது என்றால் சரிதான். ஸ்ரீ சரவணா ஜீவல்லரி என்ற பெயரில் இருந்து

09.09.2022 அன்று எனக்கு ரூ.65,000/-மும், 08.10.2022 அன்று ரூ.60,000/-மும் அதே தேதியில் ரூ.5,000/- மும், 11.01.2023 அன்று ரூ.5,000/-மும், 13.10.2022 அன்று ரூ.25,000/-மும், 29.08.2022 அன்று ரூ.25,000/-மும் Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஸ்ரீ சரவணா ஜீவல்லரி என்ற பெயரில் கொடுத்த தொகை எதிரியின் கணவர் எனக்கு ஸ்ரீ சரவணா ஜீவல்லரி என்ற பெயரில் கொடுத்தது என்றால் சரியல்ல. நாகராஜன் என்ற பெயரில் இருந்து 04.02.2023 அன்று எனக்கு ரூ.15,000/-மும், 28.12.2022 அன்று ரூ.14,500/-மும் 04.01.2023 தேதியில் ரூ.5,000/- மும், 13.01.2023 அன்று ரூ.50,000/-மும், 28.12.2022 அன்று ரூ.10,500/-மும், 06.01.2023 அன்று ரூ.25,000/-மும், 28.01.2023 அன்று ரூ.25,000/-மும், 08.01.2023 அன்று ரூ.40,000/-மும், 28.03.2023 அன்று ரூ.25,000/- மும், 09.01.2023 அன்று ரூ.5,000/-மும், 04.01.2023 அன்று ரூ.10,000/-மும், 28.11.2022 அன்று ரூ.25,000/-மும் Gpay மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நாகராஜன் என்ற பெயரில் கொடுத்த தொகை எதிரியின் கணவர் எனக்கு நாகராஜன் என்ற பெயரில் கொடுத்தது என்றால் சரிதான்.

4. எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் எதிரியின் கணவர் செல்லத்துரை எவ்வளவு கடன் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று வட்டியும் முதலுமாக என்னால் சொல்ல முடியும். எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் செல்லத்துரை அனைத்து கடன்களையும் என்னிடம் திரும்ப கொடுத் அடைத்திருந்தார். எதிரியின் கணவர் செல்லத்துரை மொத்தமாக ரூ.30,00,000/- கடன் வாங்கியிருந்தார். அந்த கடனை திருப்பிக்கொடுத்த பிறகும் எதிரியின் கணவர் என்னிடம் கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்தார். எதிரியின் கணவரிடம் கடனுக்கு ஆதரவாக நான் இரண்டு காசோலைகளை வாங்கியிருந்தேன். எதிரியின் குடும்பத்தை எதிரியின் கணவர் எதிரியின் மாமனார், எதிரியின் கொளுந்தனார் ஆகியோர் வரவு செலவு பார்த்து வருகிறார்கள். எதிரி என்னிடம் எந்த வித கடனும் வாங்கவில்லை என்றும், அதற்காக இந்த வழக்கு காசோலையை கொடுக்க வில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் இந்த வழக்கு காசோலைகள் தவிர மேலும் மூன்று காசோலைகளை எதிரியின் கணவர் செல்லத்துரை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. எதிரியின் கணவர் செல்லத்துரைக்கு நான் கொடுத்த கடனிற்காக செல்லத்துரையின் ஏழு காசோலைகளையும் எதிரியின் நான்கு காசோலைகளையும்

செல்லத்துரையிடம் இருந்து நான் உத்தரவாததிற்காக வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் செல்லத்துரைக்கும் எந்த தேதியில் பணப்பரிமாற்றம் நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி செல்லத்துரை இந்த வழக்கு காசோலையை நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது கூட என்னுடன் தொடர்பில் தான் உள்ளார். எதிரிக்கும் செல்லத்துரைக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கணக்கு வழக்கு நோட்டு எதுவும் பராமரிக்கவில்லை. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் அதில் உள்ள விபரங்கள் பூர்த்தி செய்தவை எதுவும் எதிரியுடையது இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் செல்லத்துரைக்கும் எனக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக எதிரியின் காசோலையை பயன்படுத்தி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.